## கடற்கரை கவியரங்கு எண் – 610 நாள் 06-02-2022

# மனத்தின் கலன்!

காலம் நமக்குள் கவிதைகள் சொல்ல,
நாளும் பொழுதும் நன்மைகள் தருமோ!
கோலம் என்னும் கொள்கை மறந்து,
ஞாலம் இதனின் உண்மைகள் அறிவோம்!

பாலம் அமைத்து; பண்புகள் சேர்த்து,
தாழ்வும் உயர்வும் தகைவின்றி நீங்க,
ஆலம் விழுதின் ஆராவரம் இன்றி,
வாழ்வினை நகர்த்தும் வகைதனைச் செய்வோம்!

வாழ்வின் அறங்களை வகுத்து நிரைப்போம்!
வனப்பும் சிறப்புமே வாழ்க்கை இல்லை!
வானவில் போலே கலையும் கனவுகள்!
தானாய் எவையும் சேர்வது மில்லை!

வீணாய் மனத்தை விரும்பிக் கோக்காமல்,
தானாய் மாறும் நிலையும் தேடாமல்,
போனால் வராத பொழுதையும் அறிந்து,
மானுட வாழ்வின் மகத்துவம் தெளிவோம்!

நாடும் உலகியல் நன்மைகள் தந்திட,
ஓடும் வழிதனில் ஓடிக்கொண்டே,
காணும் அழகினில் கற்பனை இன்றியே,
சூடும் மனமாய் நம்மை ஆளுவோம்!

கூடாக் கல்வியும், தேடாச் செல்மும்,
வாடிய மனத்தில் வாழ்வைத் திணிக்கும்!
ஆடும் விழிக்குள் தேடிய கனவும்,
மூடிய விழிதனில் முகவரி திருத்தும்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

06-02-2022 (05.00 பி.எம்.)

